விலை ரூபா 1-00

★ யாழ். நூல்நிலையம் எரிக்கப்பட்டு ஓராண்டு:

## ஒருநாள்முழுவதும்கூட்டணித் தலைவர்கள் உண்ணாவிரதம்


# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 வைகாசி 7 றஜப் 26 இதழ் 97
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21—5—82


[யாழ்ப்பாணம்]

யாழ். பொதுசன நூல் நிலையம் எரிக்கப்பட்ட முதலாண்டை க்குறிக்கும்முகமாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் யாழ். பொதுசன நூலக வளவிற்குள் ஜூன் மாதம் முதலாம் திகதி ஒருநாள் முழுவதும் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவுள்ளனர்.

இவ் உண்ணாவிரதத்தின் போது யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனின் இல்லம் தீக்கிரையாக்கப்பட்டதும், 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் எரிக்கப்பட்டதும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகம் கொளுத்தப்பட்டதும் நினைவுகூரப்படும். ம-வெ)

★ ஜனாதிபதி நிதி: 50லட்சம் ரூபா . ★ திறைசேரி: 50 லட்சம் ரூபா

# தனியார் நிறுவனங்களுக்கு ஒரு கோடி ரூபா நஷ்டஈடு!

## லயனல் குழு சிபார்சு மீது அரசு வழங்க முடிவு

(கொழும்பு)

**யாழ். வன்செயல்கள் தொடர்பாக 'லயனல் குழு' தெரிவித்த சிபார்சுமீது, தனியார் நிறுவனங்களுக்கு ஒரு கோடி ரூபா நஷ்டஈடு விரைவில் வழங்கப்படும்.**

ஜனாதிபதி நிதியிலிருந்து ஐம்பது லட்சம் ரூபாவும், திறைசேரியிலிருந்து ஐம்பது லட்சம் ரூபாவுமாக ஒரு கோடி ரூபா நஷ்ட ஈடாக வழங்கப்படும்.

நேற்றுப் பகல் நடைபெற்ற உயர்மட்ட மகாநாட்டில் மேற்படி முடிவுசெய்யப்பட்டது.

இம்மகாநாட்டில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரதி நிதி அமைச்சர் ஜனாப் எ. எச். எம்.நெயினா மரிக்கார் திறைசேரி செயலாளர் திரு, திலகரத்ன ஆகியோருடன் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ அமிர்தலிங்கமும் கலந்துகொண்டனர்.

1981 மே 31, ஜூன் 2 வரையில் யாழ். நகர எல்லைக்குள் நிகழ்ந்த வன்செயல்களின் போது சொத்துக்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் குறித்து முன்னாள் யாழ். அரசாங்க அதிபரும் தற்போதைய திருகோணமலை அரசாங்க அதிபருமான திரு. லயனல் பெர்னாண்டோ தலைமையில் விசாரணை நடைபெற்றது தெரிந்ததே.

''லயனல் குழு', தனியார் நிறுவனங்களுக்கு

[8-ம் பக்கம் பார்க்க]

## இளைஞர்மீது துப்பாக்கிச் சூடு!

[யாழ்ப்பாணம்]

உழவுயந்திரத்தில் வைக்கோல் ஏற்றி வந்த இளைஞர் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி ஆபத்தானநிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்!

கிளிநொச்சி வட்டக்கச்சியைச் சேர்ந்த சோமசுந்தரம் சந்திரதாஸ் [30 வயது] என்பவரே துப்பாக்சிச் சூட்டுக்கிலக்கானவராவார்.

நேற்றுமுன்தினமிரவு 9-30 மணியளவில் இவர் வைக்கோல் ஏற்றிக்கொண்டு தமது வீட்டுக்குவரும் வழியிலேயே இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நிகழ்ந்ததாகவும் தலையிலும், தோள்மூட்டிலும், கையிலும் படுகாயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாகஎவரும் கைதுசெய்யப்படவில்லை. கிளிநொச்சிப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். [கிளி. நிரு. மா]

## யாழ். பொதுசன நூலக நிதிக்கு ஜனாதிபதி ரூபா 9 லட்சம் காசோலை வழங்கினார்

(கொழும்பு)

எரிக்கப்பட்ட யாழ். நூலகத்தை புனரமைப்பதற்கான நிதிக்கு ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன 9 லட்சம் ரூபாவை நேற்று வழங்கினார்.

ஜனாதிபதி நிதியிலிருந்து வழங்கப்பட்ட இந்நிதிக்கான காசோலையை திரு. ஜெயவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## வங்கி ரூ. 50,000 அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பொதுசன நூலக நிதிக்கு, ஹட்டன் நாஷனல் வங்கி 50,000 ரூபாவை அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

இம்மாதம் 24 ம் திகதி பிற்பகல் யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் திரு.இராஜா விசுவநாதனிடம் அவரது அலுவலகத்தில் வைத்து ஹட்டன் நாஷனல் வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் திரு.முருகேசு நவரத்தினராஜா மேற்படி காசோலையை கையளிப்பார்.

வரையறுக்கப்பட்ட ஹட்டன் நாஷனல் வங்கியின் இயக்குநர் சபை சமீபத்தில் கூடி, யாழ். மாநகர நூல்நிலையத்துக்கு நிதி உதவி வழங்குதெனத் தீர்மானித்ததைத் தொடர்ந்தே இந்த நிதி வழங்கப்படுகிறது. [மா]

## துறைமுக தொழிலாளருக்கு அமைச்சர் மத்யூ பாராட்டு

### சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்கு வெளிச் செலாவணி ரூபா 4 லட்சம்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் லாபம், எரிபொருள் செலவினால் குறைவதைத்தொடர்ந்து இதுவரை காலமும் பெற்றோலியம் எரிபொருளில்இயங்கிவந்த சூளைகள் கடந்த மாதம் முதல் கரியில் இயங்கஆரம்பித்துள்ளது. இதனால் எரிபொருளில் ஏற்பட்ட செலவைவிட கரிக்கு ஐம்பது வீதமே செலவிடப் படுவதாகக் கணக்கிடப்பட்

[8-ம் பக்கம் பார்க்க]

## தூசியைக் கட்டுப்படுத்த புதிய சாதனம்!

(கொழும்பு)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் தூசினால் சுற்றுடல் அசுத்தமாவதைத்தடுப்பதற்காக அங்கு புதிய சாதனமொன்று அமைக்கப்படவுள்ளதாக சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அசோகா சோமரத்ன தெரிவித்தார்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து நாளாந்தம் 110 தொன் சிமெந்துத் தூசி வெளியேறுவதாகவும், இதனைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய சாதனம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

புத்தளம் சிமெந்துத்தொழிற்சாலையிலும் இத்தகைய சாதனமொன்று அமைக்கப் படுமென்றும் அவர் கூறினார். [வெ]

## பூர்த்திபெறும் நிலையில் புற்றுநோய் சிகிச்சை நிலையம்

### நிதிஉதவி கோரப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அமைக்கப் பட்டுவரும் புற்றுநோய் சிகிச்சை நிலையக் கட்டிடத்தைப் பூர்த்திசெய்ய, பொதுமக்களின் தாராள நிதிஉதவியை புற்றுநோய் சிகிச்சை நிலைய அமைப்புச்சபைகோரியுள்ளது.

'ஈழநாடு' பத்திரிகையின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மேற்படி கட்டிட நிதிக்கு இதுவரை பத்து லட்சம் ரூபா சேர்ந்துள்ளது. மேலும் பத்து லட்சம் ரூபா நிதிஉதவி தேவைப்படுகிறது.

இரண்டுமாடிகளைக்கொண்ட புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில், கட்டிட வேலைகள் முடிவடைந்து இரண்டாவது மாடியின் கூரைவேலைகளும் பூச்சு வேலைகளுமே பாக்கியாக உள்ளது என்றும் கட்டிடத்தைப் பூர்த்திசெய்ய பத்துலட்சம் ரூபா அவசரமாகத் தேவைப் படுகிறது என்றும் புற்றுநோய் சிகிச்சை நிலைய அமைப்புச் சபையின் இணைச்செயலாளர் டாக்டர் எஸ் சபாரத்தினம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களிடமிருந்தும் பொது ஸ்தாபனங்கள் தனியார் வர்த்தக நிறுவனங்களிடமிருந்தும் தாராள நிதி உதவி விரைவாகக் கிடைக்குமபட்சத்தில் சில வாரங்களுக்குள் புற்றுநோய் சிகிச்சை நிலையக் கட்டிடம் பூர்த்திபெறுவதுடன் சிகிச்சை நிலையமும் இயங்கத்தொடங்கி

[8-ம் பக்கம் பார்க்க]

## பாராளுமன்ற நிகழ்ச்சிகளை யாழ். மேயர் அவதானித்தார்

(கொழும்பு)

யாழ். மாநகர சபை முதல்வர் திரு. இராசா விசுவநாதன் நேற்று பாராளுமன்றம்சென்று சபை நிகழ்ச்சிகளை அவதானித்தார்.

இவருடன் யாழ். நூலக வாரத்திற்காகக் கொழும்பு சென்ற 4 மாநகர சபை உறுப்பினர்களும் பாராளுமன்ற கலரியில் காணப்பட்டனர். [ம-இ]

### மணிவாக்கு

வீரம் என்பது கொலையல்ல
வெற்றியும் அதனால் நிலையல்ல
தீரம் என்பது திடசாந்தம்
தெரிவிப்பது நம் சித்ராந்தம்

— நாமக்கல் கவிஞர்.

# நமது நோக்கு

## தொண்டும் துன்பமும்

ஒருவன் தன் சொந்த வாழ்விலும், உலகத் தொடர்பான வாழ்விலும் கடமைகளை ஆராய்ந்து இடைவிடாமல் உழைத்து வந்தால்; அவற்றின் நற்பயன்களைக் கண்டு மகிழ்ந்து கூத்தாடாமலும், ஏமாற்றங்களைக் கண்டு சோர்ந்து போகாமலும் தமது ஆற்றலை அர்ப்பணித்தானுனால் அதனை உண்மைத் தொண்டெனக் கொள்ளவேண்டும்.

காலஞ்சென்ற தமிழறிஞர் க.கி. நடராஜனின் வரலாற்றை எங்கள் நேற்றைய பத்திரிகையில் படித்தவர்கள் இந்த உண்மையை நிச்சயம் உணர்வார்கள்.

யாழ்ப்பாணத்தின் அண்மைக்கால சரித்திரத்தில் தவயோகிகள், கவிஞர்கள், தமிழாராய்ச்சி நிபுணர்கள், இலக்கிய, இலக்கண விற்பன்னர்கள், ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெற்றும் தமிழின் உச்சநிலையை, சைவத்தின் தனித்துவ சிறப்பை நன்குணர்ந்த மேதைகள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது இன்றைய இளம் சந்ததிக்கு தெரியாமலிருக்கலாம்.

இதனை நன்கறிய, சமூகத்துக்குணர்த்த பல சான்றுகள் உண்டு. அமரர் ''கேகே''யின் மாணவ பருவத்தைக் குறிப்பாகக் கவனித்தால், அவர் படித்துத் தேறித் திறம்பட தொண்டுசெய்யும் வாய்ப்புக்கு உதவிய பலருள், மூன்று கல்லூரிகளுக்கு தலைமைவகித்த பேரறிஞர்கள் முன்னிற்பது புலப்படும்.

சைவப்பெரியார் சிவபாதசுந்தரம்— யாழ்ப்பாண வாலிப மாநாடு அரசாங்க சபையைப் பகிஷ்கரித்த வருடம் அதற்குத் தலைமை தாங்கியவர்— விபுலாநந்த அடிகள், முன்னைநாள் அமைச்சர், தமிழறிஞர் சு. நடேசபிள்ளை — இம்மூன்று மகான்களும் கல்லூரி அதிபர்கள் மட்டுமல்ல, தொண்டால் அகில இலங்கை புகழ்பெற்ற அறிஞர்கள். இன்னும் அநேக பெரியோர் தொண்டர்களாகத் திகழ்ந்தனர்.

இன்றைய தாழ்ந்த நிலைமையை நோக்கி வருந்தும் தமிழ்மக்கள் இவ்வித பெரியார்களின் கல்வி, சமூக சேவை நாட்டின் தேசிய வாழ்வில் செறிந்திருப்பதை உன்னிட்படித்தல் அவசியம்.

எமது இன்றைய சிறுமைக்கு நாமே பெருங்காரணமென்பதை இந்த ஆராய்ச்சி புலப்படுத்தும். அத்தகைய ஆராய்ச்சி எங்களுடைய குறுகிவரும் மனோபாவத்தை பரந்த அளவில் விரிவடைய உதவும்.

தொண்டே வாழ்க்கையின் சீலம் என்று கொண்ட நடராஜன் போன்ற கவிஞர்கள், அறிஞர்கள் எத்தகைய துன்பத்துக்குள்ளாவார் என்பதை ஒரு பண்பட்ட சமூகம் அறியும் ஆற்றல் கொண்டிருக்க வேண்டும்.

நிரந்தர வருமானமற்ற பொருள் வசதியற்ற பல திறமைசாலிகள் பல குடும்ப இடர்கள் மத்தியில் எவ்வித சலிப்புமின்றி துன்பத்தை ஒரு ஆபரணமாகக் கொண்டு சமய, சமூகத் தொண்டுசெய்து அழியாப் புகழ்பெற்றிருக்கின்றனர்.

தொண்டு மனப்பான்மை அருகிவரும் இக்காலத்தில் இச்சிறந்த வரலாறு தொடர்வதெங்ஙனம்?

## இன்று நூற்றாண்டுவிழா

# 'கல்கி' பாராட்டிய வதிரிப் பெரியார்

''வதிரிப் பள்ளிக்கூடத்தில் (தேவரையாளி இந்துக் கல்லூரி) நிகழ்ந்த வரவேற்பு நிகழ்ச்சியின் முடிவில், அப்பள்ளிக்கூடத்தின் மூக்கிய ஸ்தாபகரான திரு கா. சூரன் என்பவரை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள் இப்பெரியார் நந்தன் சரித்திரத்தில் வரும் பெரியகிழவனாரை எனக்கு ஞாபகப்படுத்தினர். ஆனால் அந்தப் பெரிய கிழவனுருக்கும் இந்தச் சூரனுருக்கும் வேற்றுமை மிக அதிகம். இவர் காந்தி மகான் மறைந்ததும் இயற்றி அச்சிட்ட ஒரு பாடல் புத்தகத்தை எனக்கு அளித்தார். அந்தப்புத்தகத்தை ஒரு பொக்கிஷமாக நான் போற்றி எடுத்துக்கொண்டு வந்தேன்.

\- தெணியான் -

இதை எழுதியவர் ஒரு வயது முதிர்ந்த கிழவர். இத்தகைய உத்தமர்களாலேதான் உலகில் மழை பெய்கிறது. இலங்கையை அடியோடு கடல் கொண்டு போய்விடாமல் கொஞ்சம் கொஞ்சமாகக் கரையைஇடிப்பதுடன் திருப்தியடைந்து நிற்கிறது. வாழ்க திரு. சூரனார்! வாழ்க அவருடைய திருக்குலம்!''

அமரர் கல்கி அவர்கள் தேவரையாளி இந்துக்கல்லூரி ஸ்தாபகர் திரு. கா. சூரன் அவர்கள் பற்றி, ''இலங்கையில் ஒரு வாரம்'' என்ற தமது நூலிலே குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இன்றுள்ள பலநூறு பாடசாலைகளுக்குமத்தியில்தேவரையாளி இந்துக்கல்லூரி தனித்துவமும், வரலாற்று முக்கியத்துவமுடையவொன்றாகவிளங்குகின்றது. சமூக ஒடுக்குமுறைகளுக்கு மத்தியிலே, தமது உரிமைகளை இழந்து அல்லற்பட்டுக்கொண்டிருந்த சிறுபான்மைத் தமிழ்மக்கள் மத்தியிலே 1917-ம் ஆண்டு இக்கல்லூரியைத் தோற்றுவித்தபெருமை திரு. கா. சூரன் அவர்களையே சாரும். அந்நியர் ஆதிக்கம் வலுப்பெற்றிருந்த காலத்திலே சைவத்தையும், தமிழ் மொழியையும் பேணிப் பாதுகாக்க வேண்டும்என்ற நல்லெண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தியாகத்தின் சின்னம் இக்கல்லூரி ('தேவரையாளி இந்து, கன்னி இதழ்) எனப் போற்றப்பெறுவதற்கு வித்திட்ட பெருமை சூரன் அவர்களையே சாரும். தமிழ்நாட்டிலே ஒரு பச்சையப்பர் தோன்றி, தமிழர் கலாசாரத்தைப் பாதுகாப்பதற்கு எனக் கல்லூரியைத் தோற்றுவித்தார். பெரியார் சூரன் அவர்கள்பச்சையப்ப போன்று பொருள் வளம் படைத்த ஒருவரல்லர். ஆயினும் சிறுபான்மைத தமிழ் மக்களின் வாழ்விலே அறிவொளியும், சமய, கலாசாரமும் பெருகவேண்டும் என்ற மனவளம் கொண்டவராக விளங்கினர். தமது சுயசரிதையில் அன்னார் குறிப்பிட்டுவதுபோல, தாம் பட்டினி இருந்தும் பலரிடத்தே ஆதரவு பெற்று இக்கல்லூரியை ஸ்தாபித்தார்.

திரு. கா. சூரன் அவர்கள் தமது பதினெட்டாவது வயதிலேயே புலால் உண்ணுவதை ஒழித்து, சமய ஆசார வாழ்வைக் கைக்கொண்டார். தமது சமூக மக்களையும் அவ்வழியில் இட்டுச்செல்ல வேண்டுமெனக் கருதியே இக்கல்லூரியைநிறுவினார். அன்னாரே தாழ்த்தப்பட்ட மக்களின் ''ஆறுமுக நாவலராக'' விளங்கினவராவார்.

நீறணிந்த நெற்றியராக எப்பொழுதும் திகழ்ந்த சூரன் அவர்கள் சமய ஒழுக்கமும், சமய ஞானமும் மிக்கவராக விளங்கினர். கிறிஸ்தவ சமயப் பாதிரிமாருக்கு அவ்வப்போது மறுப்புக்களும், கண்டனங்களும் எழுதி வெளியிட்டு வந்துள்ளார். தேவரையாளிப் பாடசாலையிலும், தமது சமூக மக்கள் மத்தியிலும் சமயப் பிரசங்கங்கள் செய்து மக்களை நெறிப்படுத்திவந்தவரும் அவரே.

காந்தீயவாதியாக விளங்கிய அன்னார், 'பராசக்தி' சினிமாப் படம் ஆஸ்திகக்கருத்துக்களைத் தான் கருவாகக் கொண்டுள்ளது என்பதனைப் புதுமையாக விளக்கி, விமர்சன நூல் ஒன்றினை எழுதி வெளியிட்டார். மகாத்மா காந்தியின் மரணத்தைக் குறித்த இரங்கற் பாடல்கள், தேவரையாளி அம்மன் மீது துதிப் பாடல்கள் என்பவற்றையும் ஆக்கி வெளியிட்டார்.

அப்பெரியார் அத்திவாரம் இட்ட தேவரையாளிப் பாடசாலை இன்று வடபிரதேசத்தில் பிரபலமான கல்லூரிகளில் ஒன்றாக விளங்குகிறது. பெரியார் திரு. கா. சூரன் அவர்களது நூற்றாண்டு விழாவை இன்று (21-5-82) கல்லூரி சிறப்பாகக் கொண்டாடிப் பெருமைகொள்கிறது.

## கல்வி அமைச்சின் கவனத்துக்கு

திடீர் தேயிலை [Instant Tea] வேகமான வாழ்க்கையில் அகப்பட்டு அந்தரிக்கும் மக்களுக்கு அவசிய தேவை; சுவையிற் குறைந்தாலும் 'பறந்தோடிகளுக்கு' அது இன்றியமையாத பண்டம்.

கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கனுப்பிய புதிய சுற்று நிருபம் ஒரு 'இன்ஸ்டன்' அறிவித்தல் போல் தெரிகின்றது. பாவனையாளர் எவரும் சுவைக்க முடியாத செய்தி.

எங்கள் நேற்றைய பத்திரிகையில் ஒரு மாணவன் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மாணவர்கள் சார்பில் இதுபற்றிப் பிரஸ்தாபித்துள்ளார். சுற்று நிருபங்கள் வருவதும்போவதும் கல்வி அமைச்சின் அன்றாட வாழ்க்கையின் சாதாரண நிகழ்ச்சி. புதிய தொன்றைப் படித்து விளங்க முன் அது ஒழிந்திட்டு இன்னென்றுரும்.

இந்த வகையில் இன்று கண்டனத்துக்குள்ளான இச்சுற்று நிருபம் கடந்த மார்கழியில் நடைபெற்ற பரீட்சார்த்திகளைக் கடுமையாகப் பாதிக்கின்றதென்பதே ஆட்சேபனை.

உயர்வகுப்பு [A/L வகுப்புகள்] அனுமதியைக் கட்டுப்படுத்தும் சட்டம் கல்விக்கொள்கைக்கமைய நன்றாகச்சிந்தித்து திருப்தியான முடிவுக்கு வந்தநிலையில் வெளிவருவதே நியாயமாகும்.

காலத்துக்குக்காலம் மாற்றம் ஏற்படுவது அவசியம். முன்னொரு காலத்தில் இருந்த கட்டுப்பாடு மிகவும் இறுக்கமானது. O/L பரீட்சையில் மூன்று திறமைச் சித்திகளும் அவற்றுள் இரண்டு A/L வகுப்பில் படிக்கும் பாடங்களாகவும் இருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தது.

தரமான மாணவர்கள் மேல் வகுப்பில் படித்து வந்தது நாமெல்லோரும் அறிந்ததே; இருப்பினும் இது 'கடும்பிடி'யென்று இந்தக் கட்டுப்பாட்டால் சில மாணவர்கள் அநியாயமாக மேல்வகுப்புகளில் தொடர்ந்து படிக்கும் சந்தர்ப்பத்தை இழக்கின்றனர் என்றும் வாதாடி இது தளர்த்தப்பட்டது.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் வாய்ப்பு மட்டுமல்ல; உயர்தரப்படிப்புக்கு எத்தகைய திறமையுமில்லாத பலர் பாடசாலைகளில் கூத்தாடித்திரிவதை நாம் மறுப்பதற்கில்லை. ஆயினும் பெற்றோர் பொதுமக்களின் நல்லெண்ணத்தைத் திரட்டும் காரணங்கொண்டும் வேண்டிய கட்டுப்பாடுகளைத் தளர்த்திவந்த அரசு ஒரு நிதானமான கொள்கையை — கல்விச்சிந்தனைகளுக்கமைய — கடைப்பிடிக்கத்தவறுவதை நாம் கண்டிக்கவேண்டும்.

குறிப்பிட்ட இந்தச்சுற்று நிருபத்தின் பெருங்குறை; மாணவர்கள் பரீட்சை எடுத்தபின் அமுலுக்கு வரத்தயாரித்த சடுதி ஏற்பாடென்பதே. இரண்டு பாடங்களில் திறமைச்சித்தி போதுமென்றிருந்த நிபந்தனைக்குட்பட்டவர்கள் இந்தப் பரீட்சார்த்திகள்!

இதனை மாற்றுவது சட்டத்துக்கு முரணானது: கல்வியில் தெளிவான கொள்கையற்ற நிலையை வெளிப்படுத்துகிறது. மாணவர்களுக்கு ஏமாற்றமளிக்கிறது. பாடசாலைகளில் வகுப்புகள் அமைக்கும் ஒழுங்குக்கு குந்தகம் விளைக்கின்றது.

எவ்வகையில் பார்த்தாலும் இது போதிய அறிவித்தல் கொடுக்காமல் நினைத்தபடி மாற்றும் பல்கலைக்கழக அனுமதித்திட்டத்தின் 'தம்பி'யெனலாம்.

கட்டுப்பாடுகள் இறுக வேண்டுமானால் அவற்றை விளக்கி நியாயமானமென்பதை நிரூபித்து போதிய அறிவித்தல் கொடுபட வேண்டும்,

## மிருதங்க இசைவிழா

கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக மிருதங்க ஆசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றிவரும் 'மிருதங்கமணி' திரு. எம். என், செல்லத்துரையின் தனி முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட திருநெல்வேலி நந்தி இசை மன்றம் ஆண்டுதோறும் மிருதங்க இசை விழாக்களை நடத்தி ரசிகர்களை மகிழ்வித்து வருகிறது.

எட்டாவது ஆண்டு மிருதங்க இசைவிழா நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இன்று ஆரம்பமாகி இருபத்துமூன்றும் திகதிவரை நடைபெறவிருக்கின்றது.

நா. இராமச்சந்திரன்

நந்தி இசைமன்றத்தின் இதயம் போல் விளங்கும் எம். என். செல்லத்துரையை கர்னாடக இசைத்துறையில் ஈடுபாடு உடைய பலரும் அறிவர் அந்த அளவுக்கு மிருதங்க இசைத்துறையில் பிரபல்யம் அடைந்தவர். அன்றுதொட்டு இன்றுவரை மிருதங்க இசைத்துறையில் காட்டிவரும் ஆர்வமும் அக்கறையும் இவரது பிரபல்யத்துக்கு மூலகாரணமாகும். இவரிடம் மிருதங்க இசை பயின்றவர்கள் இன்று பிரபல்யம் அடைந்த மிருதங்க வித்துவான்களாக இருக்கிறார்கள். இதுவரை இருநூறுக்கும் மேற்பட்ட மேடைகளில் மிருதங்க இசை நிகழ்ச்சிகளை நடாத்தி எண்ணற்ற இசை ரசிகர்களை மகிழ்வித்தவர். மிக அண்மையில் மண்டைதீவு தமிழிசை சங்கத்தின் பதின்னான்காவது ஆண்டு இசைவிழாவில் மிருதங்க இசைக் கச்சேரி நடாத்தி மக்களின் பாராட்டைப் பெற்றவர்.

''மிருதங்க இசைபயிலும் மாணவர்களினதும் பெற்றோரினதும் ஆதரவோடும்தான் நந்தி இசைமன்றத்தை வளர்த்துவருகின்றேன்'' என்று இவர் குறிப்பிடுகின்றார். இவரது பணி வளரட்டும்.



## திருக்கேதீஸ்வரம் வருடாந்த மஹோற்சவம்

(கேதீஸ்வரம்)

திருக்கேதீஸ்வரம் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 26ம் திகதி ஆரம்பமாகிறது.

அடுத்த மாதம் 3ம் திகதி தேரும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெற்று வருடாந்த மகோற்சவம் முடிவடையும்.

திருவிழாக் காலங்களில் வருகைதரும் பல்லாயிரக்கணக்கான அடியார்களின் வசதிக்காகப் போக்குவரத்துச் சபை, குடிநீர் வழங்கல்சபை, பாதுகாப்பிலாகா, சுகாதார இலாகா ஆகியன சிறந்த சேவையாற்றவுள்ளன. திருப்பணிச்சபை தங்குமிடவசதி உணவு முதலிய பல சேவைகளைச் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று ஆலயத் திருப்பணிச்சபை அறிவித்துள்ளது. (இ)

# போக்லண்டில் பிரிட்டிஷ் படை!

# பெரும் படை எடுப்புக்கு முஸ்தீபு?

## விமானத் தாக்குதல் தொடருகிறது!

லண்டன் மே. 20

பெரும் படையெடுப்பொன்றுக்கு ஆயத்தம் செய்வதற்காக பிரிட்டிஷ் காமாண்டோபடை நேற்று போக்லண்ட் தீவுகளில் தரை இறங்கியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

பிரிட்டிஷ் போர் கப்பல்கள் மீண்டும் போக்லண்ட் மீது தாக்குதல் நடத்தியுள்ளன. போட் ஸ்ரான்லி துறைமுகத்தில் பிரிட்டிஷ் கரியர் விமானங்கள் தாக்குதல் நடத்திய போது கரையிலிருந்து ஆர்ஜென்டீனு படைகள் எதிர் தாக்குதல் நடத்தியுள்ளன.

போக்லண்ட் சமாதான தான பேச்சுக்களை தொடர்ந்து நடத்துவதற்கு ஐ. நா. பொதுச் செயலாளர் திரு. கொயில்டுக்கு ஐ. நா. பாதுகாப்புசபை மேலும் அவகாசம் வழங்கியுள்ளது.

பாப்பரசர் வத்திகான் நகரில் நடைபெறும் சமாதான ஆராதனையில் ஆர்ஜென்டீனு பிரிட்டிஷ் கத்தோலிக்க அதிமேற்றிராணிமாரை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

போக்லண்ட் பிரச்னையில் சமாதான முயற்சியை ஏற்படுத்த 11 நாட்களாக ஐ. நா தலைமைச் செயலாளர் நடத்தி வரும் பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

பேச்சுவார்த்தை வெற்றி பெற இறுதிவரை முயற்சிக்கப் போவதாக ஐ. நா. தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.

ஆர்ஜென்டீனுவின் கருத்துப் பற்றி பிரிட்டன் தனது யோசனையை தாமதமின்றி வெளியிடவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். (க)

மகாவலி அபிவிருத்தி:

## மாணவர்களுக்கிடையில் போட்டிநடத்த ஏற்பாடு

(கொழும்பு)

பாடசாலைகளில் மகாவலி அபிவிருத்தித் திட்டம்தொடர்பான போட்டியொன்றை நடாத்த மகாவலி அபிவிருத்திச்சபை ஏற்பாடு செய்துள்ளது.

மகாவலித்திட்டம் பற்றிய தவருன பிரசாரத்தை முறியடிக்கவும், இளைஞர் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் இப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கல்விஅமைச்சு இப் போட்டிக்கான சுற்றறிக்கையை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது முதலாம் கட்டப்போட்டி ஜூலை 31ம் திகதி ஆரம்பமாகும்.

9-ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கான இந்த அறிவுப் போட்டியில் முதல் பரிசாக 10,000 ரூபா வழங்கப்படும். இரண்டாவது பரிசாக இருவருக்கு தலா 2500 ரூபா வழங்கப்படும்.

வெற்றிபெற்ற மாணவர்கள் மகாவலி திட்டப் பகுதியைச் சுற்றிப் பார்வையிடவும் ஏற்பாடுசெய்யப்படும். (க)

## பகிஷ்கரிப்புக் கோரிக்கை பிசுபிசுப்பு!

புதுடில்லி மே 20

பாரதத்தின் குட்டிப் பொதுத்தேர்தலின் வாக்களிப்பு ஒருசில இடங்களை தவிர மிக அமைதியாக நடைபெற்றுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வாக்குகள் தொடர்ந்து எண்ணப்பட்டுவருகிறது.

மேற்கு வங்காளத்தில் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு பெருமளவில் பிரசாரம்மேற்கொண்டபோதிலும், பெருந்தொகையானேர் காலையிலிருந்தே வாக்களித்தார்கள் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

கேரள மாநிலத்தில் முதல் தடவையாக 'எலக்ரோனிக்' கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. கேரளாவில் பகுர் தொகுதியிலுள்ள 84 வாக்களிப்பு நிலையங்களில் 50 நிலையங்களில் 'எலக்ரோனிக்' கருவிகளின் பொத்தானை அழுத்துவதன் மூலம் வாக்களிப்பு நடைபெற்றது.

பாராளுமன்றத்தின் 6 தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் நடைபெற்றது.

ஒரு கிராமத்தில் கிராமம் புறக்கணிக்கப்பட்டத்திற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக வாக்குச் சாவடிக்கு எவரும் வாக்களிக்கவரவில்லை. மற்றெரு வாக்கு சாவடிக்கு வாக்களிக்க 130 வயதான பழங்குடியைச் சேர்ந்த ஒருவர் வந்திருந்தார்.

5 கோடி 70 லட்சம் வாக்காளரில் 60 சதவீதமானேர் நேற்று வாக்களித்தனர். கேரளத்தில் 70 வீதம் முதல் 78 வீதம் வரை வாக்களித்தனர். கேரளத்திலும் மேற்கு வங்காளத்திலும் பெரும்பான்மையினர் வாக்களித்தனர்.

கிராமப்புறங்களில் ஆண்களிலும் பார்க்க பெண்களே கூடுதலாக வாக்களித்திருந்தனர். (க)

## ஸ்தாபகர் நூற்றுண்டு விழா

[யாழ்ப்பாணம்]

தேவரையாளி இந்துக் கல்லூரி ஸ்தாபகர் சைவப்பெரியார் உயர்திரு கா, சூரன் நூற்றுண்டுவிழா இன்று பிற்பகல் கல்லூரி அதிபர் திரு. ஆ. இரத்தினசபாபதி தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

நூற்றுண்டு தின நினைவுச் சொற்பொழிவை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணிய ஐயர் நிகழ்த்துவார். (இ)

## கலாநிதி நடேசன் நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி சு. நடேசனின் நினைவுதினம் நாளை சனிக்கிழமை மாலை மல்லாகம் கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் திரு சு. ஸ்ரீ பாஸ்கரன் தலைமையில் நடைபெற உள்ளது.

வடபகுதி கல்விப்பணிப்பாளர், திரு. க. சிவநாதன், திரு. நமசிவப்பிரகாசம், அ. சரவணமுத்து இளைப்பாறிய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன், விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சிவதர்மவள்வல் க. கனகராசா, திரு. மு. அருளையா, திருமதி செ. நடராசா, திரு. வி. கனகசபை, திரு. ச. வேலாயுதபிள்ளை ஆகியோர் இவ்வைபவத்தில் பேசுவார்கள்.

மல்லாகம் மகாவித்தியாலயமாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளது. (கு)

## பாரத - சீன பேச்சுவார்த்தை

புதுடில்லி, மே. 20

பாரதத்திற்கும் சீனவிற்கும் இடையில் வர்த்தக, கலாசார, பொருளாதார, எல்லைப் பிரச்னை தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பாரத, சீனக் குழுக்கள் நான்கு பிரிவாக இப்பேச்சுவார்த்தையை நடத்திவருகின்றன.

## அனுரா டானியலை மீண்டும் எம். பி. யாக்க கோரிக்கை

[கொழும்பு]

கடத்தல் குற்றச்சாட்டை அடுத்து தமது பதவியை ராஜினுமாச் செய்த ஹெவாஹேட்ட முன்னுள்எம்.பி. திரு. அனுரா டானியலை மீண்டும் எம். பி. யாக நியமிக்கும்படி ஐக்கிய தேசியக் கட்சி தலைமைப் பீடத்தை பலர் கோரியுள்ளனர்.

ஹெவாஹெட்ட தொகுதியைச் சேர்ந்த பலரே இக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இளம் வயதையுடைய திரு. அனுரா டானியல் ஹெவாஹெட்ட மக்களுக்கு நேர்மையுடனும் நம்பிக்கைப் பாத்திரமாகவும் போதிய சேவையாற்றிவந்துள்ளார். எனவே மீண்டும் அவரைக் ஹெவாஹெட்ட எம்.பி.யாக நியமிக்கும்பட்சத்தில் அத்தொகுதி மக்களுக்குச் சிறந்த சேவை கிடைக்கும்என்றும் அக்கோரிக்கையில் தெரிவிக்கட்பட்டுள்ளது. [இ[

## இஸ்ரேலில் நவம்பரில் பொதுத்தேர்தல்

டெல் அவிவ் மே. 20

இஸ்ரேலில் இவ்வருடம் நவம்பர் மாதம் பொதுத்தேர்தல் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல் பிரதமர் திரு. பெகின்ல் பொதுத் தேர்தல் பற்றி பல சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கிறர்.

இஸ்ரேல் அரசுக்கு நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மானத்திற்கு ஆதரவாக 58 வாக்குகளும் எதிராக 57 வாக்குகளும் கிடைத்தன. [க]

## அலுவலகம் இடமாற்றம்

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் இம் மாதம் 24ம் திகதி முதல் மாலிசந்தியிலுள்ள மாடிக் கட்டிடம் ஒன்றிற்கு இடம்மாறுகிறது. இப்பகுதி மக்களின் போக்குவரத்து வசதியை முன்னிட்டே இக்காரியாலயம் இடம்மாறிச் செல்கிறது.

## மாரும்புலத்தில் கி. அ. சங்கம்

[புலோலி]

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மாருப்புலம் கிராமத்தில் கிராம அபிவிருத்திச்சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் போஷகராக சி. கிருஷ்ணமூர்த்தியும், தலைவராக ம. விக்கினேஸ்வரமூர்த்தியும், உபதலைவராக சி. கந்தசாமியும், செயலாளராக எஸ். எவ் போஜியாரும், உபசெயலாளராக வே. சிவராஜசிங்கமும் பொருளாளராக ம. வின்சன்ற் குணனும் செயற்குழு உறுப்பினர்களாக திருமதி தி. தவமணிதேவி, செல்வி ஜே. ஜெயமலர், க. சந்தசாமி, தி. இராஜதுரை, நா. அருட்செல்வம், சி. பன்னிருகரம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். [அ]

## பாரதி நூற்றுண்டு விழா போட்டிகள்

(கொழும்பு)

மகாகவி பாரதியின் நூற்றுண்டு விழாவை ஒட்டி அகில இலங்கை சமநீதி இயக்கம் அனைத்திலங்கை ரீதியில் 14-24 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமிடையில் கவிதை கட்டுரை, பேச்சுப்போட்டிகளை நடத்தவிருக்கின்றது.

கவிதை, கட்டுரை பேச்சுப் போட்டிகளுக்கு முறையே 'பாரதி யார்?' 'நான் காணும் பாரதி', பாரதி ஒரு சரித்திரம்' என்ற தலையங்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவிருப்பதுடன், 10 ஆறுதல் பரிசில்களும்வழங்கப்படவிருக்கின்றன. என்று அறிவிக்கப்பட்டுள்ளது, (கி)

## 6 லட்சம் சுகாதார ஊழியர் அடையாள வேலைநிறுத்தம்!

லண்டன் மே 20

பிரிட்டன் சுகாதார ஊழியர் சம்பள உயர்வு கோரி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர்.

6 லட்சம் சுகாதார ஊழியர் 12 சதவீத் சம்பள உயர்வு கோரியுள்ளனர். அரசு 4 சதவீதம் முதல் ஆறரைச் சதவீத சம்பள உயர்வு வழங்க முடியும் என்று அறிவித்திருக்கிறது.

இந்த வேலை நிறுத்தத்தால் தாதிமார், அம்புலன்ஸ். ஊழியர். ஆஸ்பத்திரி சலவைத் தொழிலாளர், நோயாளிக்கு உணவு பரிமாறுவோர் ஈடுபட்டிருந்தனர். ஆனலும் ஆஸ்பத்திரிகளில் அவசர சிகிச்சைகள் மட்டும் நடைபெற்றன. [க]

# "வெளிநாட்டு முதலீட்டினல் சோஷலிஸம் பாதிக்காது"

[கொழும்பு

இலங்கை அரசின் அரசியல் பொருளாதார கொள்கைகளை கியூபாவும் இந்தியாவும் ஆதரிக்கின்றன என்று ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

ஜனதிபதியின் இந்த உரை குறித்து ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்ததிஸ்ஸடி அல்விஸ் நேற்று பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

ஜனதிபதி பேசுகையில் மேலும் கூறியதாவது:-

கியூபா அதிபர் ஜெனரல் பிடல் காஸ்ட்ரோ இலங்கையின் கொள்கைகளை ஒத்த கொள்கைகளை ஆதரித்து வருகிருர். இலங்கையில் உள்ளது போல் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் அமைக்க உத்தேசித்து வருகிருர். வெளிநாட்டு மூலதனத்தை முதலீடு செய்வதினுல் சோஷலிஸத்துக்கு ஒரு போதும் ஆபத்து ஏற்படாத என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த அரசாங்கம் இலங்கையும் கியூபா அதிபரின் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்று கூறிவந்தது. ஆனல் கியூபா அதிபரோ ஜே. ஆரின் கொள்கையைப் பின்பற்றுகிருர்.

### இந்திராவும் கூறுகிருர்

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் ஜனதிபதி ஆட்சிமுறையினல் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்படாது என்று கூறியுள்ளார்.

[மா-இ]

## திருட்டுக் குற்றத்தை ஏற்ருர்

(வவனியா)

பிரபல அரச ஊழியரின் விடுதி உடைக்கப்பட்டு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

நேரியகுளத்தில் வசிக்கும் ஐ. எஸ். கபூர் என்ற அரசாங்க ஊழியரின் விடுதியே உடைக்கப்பட்டு, தங்கநகைகள், கசட் ரேடியோ, பெறுமதிமிக்க உபகரணங்கள் களவாடப்பட்டதாம்.

வவனியாப் பொலிஸ் உத்தியோகத்தர் திரு. ஈ. எம். ஆர். எக்கநாயக்காவின் தீவிர தேடுதல்வேட்டையின்போது, சந்தேகத்தின் பேரில் சிக்கிய காசிம்பாவா என்பவரைக் கைதுசெய்து வவனியா மாவட்ட நீதிபதி திரு ஏ. டி. எம். கே. பெத்தியாகொட முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

களவாடிய பொருட்கள் அக்கரைப்பற்று, மன்னர், புல்மோட்டை போன்ற இடங்களில் விற்கப்பட்டதாம்.

தீர்ப்பு பின்போடப்பட்டுள்ளது.

அநுராதபுரம்

## ஸ்ரீ கதிரேசன் ஆலய உற்சவம்

[யாழ்ப்பாணம்]

அநுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் ஆலய உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு நடைபெறவிருக்கின்றது.

உற்சவநாட்களில் தினமும் காலை விசேட அபிஷேகமும், இரவு அலங்காரத் திருவிழாவும் நடைபெறவிருக்கின்றன.

[கி]

## ஊழியர்களுக்கு அன்பளிப்பு

[கொழும்பு]

பெற்ரேலிய கூட்டுத்தாபன 20-ம்ஆண்டுவிழாவையொட்டி ஆரம்பகாலத்திலிருந்துசேவை செய்த ஊழியர்களுக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டது.

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பு லொத்தர் சபைத் தலைமைச் செயலகத்தில் இழுக்கப்பட்ட 885வது இலக்கத் தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு;

1ம் பரிசு
**22 U 0118**
ரூபா 100,000/-

2ம் பரிசு
**06 U 0965**
ரூபா 40,000/-

3ம் பரிசு
**26 X 0664**
ரூபா 10,000/-

ஆறுதல் பரிசாகத் தலா ரூபா 645/- பெறும் நூறு டிக்கெட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 05 A 0684 | 25 A 0728 |
| 14 B 0164 | 16 B 0928 |
| 19 C 0928 | 25 C 866 |
| 26 C C035 | 08 D 0127 |
| 10 D 0464 | 02 E 0858 |
| 03 E 0379 | 13 E 0784 |
| 22 E 0939 | 25 E 0111 |
| 08 F 0883 | 15 G 0643 |
| 16 G 0908 | 20 G 0808 |
| 25 G 0586 | 25 G 0898 |
| 03 H 0175 | 06 H 0358 |
| 07 H 0849 | 11 H 0290 |
| 20 H 022[illegible] | 26 H 0157 |
| 06 J 0547 | 07 J 0906 |
| 21 J 0701 | 22 J 0621 |
| 02 K 0[illegible]94 | 0 K 0368 |
| 05 K 0236 | 17 K 0329 |
| 13 L 02[illegible]7 | 12 M 0 90 |
| 14 M 0624 | 20 M 0076 |
| 20 M 0544 | 12 N 0451 |
| 16 N 0337 | 18 N 0503 |
| 04 O 0376 | 04 O 0589 |
| 17 O 0114 | 03 P 0830 |
| 17 P 0293 | 19 P 0287 |
| 23 p 0959 | 07 Q 0123 |
| 15 Q 0305 | 16 Q 0569 |
| 23 Q 0486 | 26 Q 0409 |
| 02 R 0505 | 15 R 0806 |
| 17 R 0748 | 26 R 0029 |
| 05 S 0116 | 25 S 0970 |
| 01 T 0630 | 06 T 0302 |
| 05 T 0841 | 13 T 0241 |
| 14 T 0522 | 21 T 0249 |
| 22 T 0068 | 26 T 0993 |
| 04 U C318 | 09 U 0093 |
| 16 U 0137 | 19 U 0013 |
| 19 U 0326 | 26 U 0059 |
| 26 U 0062 | 26 U 0209 |
| 09 V 0426 | 18 V 0717 |
| 23 V 0859 | 03 W 0404 |
| 04 W 0158 | 07 W 0610 |
| 16 W 0117 | 21 W 0292 |
| 08 X 0570 | 09 X 0627 |
| 12 X 0689 | 17 X 0374 |
| 20 X 0510 | 24 X 0364 |
| 15 Y 0803 | 15 Y 0925 |
| 18 Y 0095 | 20 Y 0122 |
| 22 Y 08 7 | 03 Z 0621 |
| 05 Z 0287 | 10 Z 0737 |
| 24 Z 0281 | 24 Z 0777 |

[இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.]

கொல்லங்கலட்டி

## விநாயகர் உற்சவம்

[காங்கேசன்துறை]

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் வசந்த மகோற்சவம் இம்மாதம் 23-ம் திகதி ஆரம்பமாகிறது. காலையில் கொடியேற்றத்திருவிழாவும் இரவு ஸ்ரீ கணேச மகாயாகாரம்பமும் இடம்பெறும்.

27-ம் திகதி தண்டிகைத் திருவிழா, 30-ம் திகதி மாம்பழத்திருவிழா. அடுத்தமாதம் 3-ம் திகதி உற்சவமூர்த்திக்கு மகாபிஷேகம், 4-ம் திகதி சப்பரம், 5-ம் திகதி தேர்த்திருவிழா, 6-ம் திகதி தீர்த்தத்திருவிழா. [அ]

# தற்காலிக பட்டதாரி ஆசிரியருக்கு நிரந்தர பதவி

## நடவடிக்கைஎடுப்பதாக 'அமிர்' உறுதி

(யாழ்ப்பாணம்)

வசதிக்கட்டணத்தில் தற்காலிகமாக பதவி வகித்துவரும் பட்டதாரி ஆசிரியர்களின் சேவையை நிரந்தரமாக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உறுதியளித்துள்ளார்.

வசதிக்கட்டணத்தில் தற்காலிக ஆசிரியர்களாகக் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களின் சங்கச் செயலாளர் திரு ரி.கந்தையா தம்மைச் சந்தித்தபோதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார். (இ)

## மிருதங்க இசைவிழா நிகழ்ச்சிகள்

(திருநெல்வேலி

திருநெல்வேலி நந்தி இசை மன்றத்தின் எட்டாது ஆண்டு மிருதங்க இசைவிழா இன்று ஆரம்பமாகிறது.

நல்லை ஆதின மண்டபத்தில் இன்று ஆரம்பமாகும் மிருதங்க இசைவிழா தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்.

### முதலாம்நாள் நிகழ்ச்சிகள்

மாலை 5 30 மணி குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்தல் 5.[illegible]0 மங்கள இசை பி. எஸ். பிச்சையப்பா கோஷ்டியினர், 6-15 மிருதங்க இசை ஜெ. சண்முகானந்த சர்மா, வை. சுப்பிரமணிய சர்மா, மா. பிரபாகரன், ந. கேசவன்.

6-35 மிருதங்கம்: ஆனந்தராசா செல்லத்துரை முரளீதரன் கனகசபை பாலமுகுந்தன் பசுபதி ஸ்ரீமோகன் இராசகோபாலஐயர்.

7-00 வீணை இசை செல்வி மாலினி ஸ்ரீநிவாசன் (யாழ். பல்கலைக்கழக வீணை விரிவுரையாளர்) மிருதங்கம்: நா. சோமாஸ்கந்தசர்மா (யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்) 7-45 தலைமைஉரை மன்றத்தலைவர் சி. பொன்னையா அவர்கள் ஆசிஉரை நல்லை ஆதீன இரண்டாம் குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் 8-00 மிருதங்க இசை வசந்தன் திருநாவுக்கரசு, சற்குணநாதன் யோகநாதன். 8-15 பண்ணிசை.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கந்தர்மட வீதி 184ம் இலக்கத்தில் வசித்த காலஞ்சென்ற பொ. காசிலிங்கத்தின் மனைவி விசாலாட்சியின் மரணச் சொத்துக்கு நிர்வாகத்தத்துவம் பெறுவதற்கு மனுப்பண்ணும் விடயமாக.

(மரணமெய்தியவர்)

மரணச்சொத்து) இல.
நியாயாதி[illegible]கம்)தத்துவம்/3660

பொன்னம்பலம் காசிலிங்கம் இல. 184, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனமில்லாத் தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1982ம் ஆண்டு வைகாசிமாதம் 28ந் திகதி முற்பகல் 9மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்ற ஆணைப்படி,
தா. குலஞானம்,
பதிவாளர்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 10ம் திகதி.

தயாரித்தவர்:
C. சோமசேகரம்,
மனுதாரின்
சட்டத்தரணி. 3251

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல. ஈடு 14552

திருநாவுக்கரசு நவரத்தினம் கைம்பெண் மகேஸ்வரி
உரும்பராய் வடக்கு, உரும்பராய்—வழக்காளி
எதிராக
1. இராசரெத்தினம் சுந்தரமூர்த்தியும்
2. பெண் கமலாம்பாளும்
76, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
—எதிராளிகள்

ஈடு 14552 வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ் காணும் ஆதனம் 1982 ஆண்டு ஜூன் மாதம் 9ம் திகதி (9-06-82) புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதலும் வட்டியுமாக ரூபா 19350/- மேலும் இதில் ரூபா 15000/-க்கு 23-9-1974 தொடக்கம் 12-11-1979 வரைக்கும் வருடமொன்றுக்கு 12 % வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 % வட்டியும் வழக்குச் செலவு ரூபா 1098-62 சதமும், விற்பனைச்சலாரும். செலவுத்தொகையில் ரூபா 250/- மாத்திரம் கொடுபட்டுள்ளது.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி வண்ணுர்பண்ணை கோவில் பற்று வண்ணுர்பண்ணை தென்மேற்கிறை மூத்தையினுன் வளவு கடையடித்திடல், சீமான்திடல், திருவளர்திடல் நெற்பரப்பு 26 குளி 10 இதில் நிந்தமாக நெற்பரப்பு ஒன்று (1) கடைக்கட்டிடங்களும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ரி. கந்தையாவால் 26-2-71ல் இல 4837 A இலக்கத்தில் தயாரிக்கப்பட்டபடத்தில் 1ம் இலக்கத் துண்டாக காட்டப்பட்டது. இதற்கு இறை மதிப்பு இல. 76 A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். இந்த நெற்பரப்பு ஒன்றிற்கும் எல்லை கிழக்கும் தெற்கும் மேற்கும் 1ம், 2ம் எதிரிக்குரிய ஆதனம். வடக்கு ரேட்டு. இதனடங்கலும். பதிவு D 377/162.

ம. வீ. த. கனகராஜா,
கோட்டுவிற்பனையாளரும்,
விலைமதிப்பாளரும்.

"ஆனந்தவாசா",
43, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
17-5-82. 3249

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு
"மேற்கு ஜெர்மனி 'BASF'"
தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 12/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

M LIMITED மக்வுட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 32941-5

Metropolitan

## இந்தியா செல்வோர்:

# டிக்கட் வழங்கும் திகதியில் மாற்றம்

### முன்கூட்டியே பதிவுசெய்யுமாறு பிரயாணிகளுக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அவசர அலுவல்கள் காரணமாக இந்தியா செல்ல விரும்புபவர்கள் முன்கூட்டியே யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் தங்களது பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டுள்ளனர்.

முன்கூட்டியே பதிவு செய்து கொள்வதன் மூலம் கடைசி நேர சிரமத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்று ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, இம் மாதம் 20, 22, 25ம் திகதிகளில் வழங்கப்படவிருந்த டிக்கட்டுகள் குறிப்பிட்ட திகதிகளுக்குப் பதிலாக இம்மாதம் 27, 29, மற்றும் அடுத்த மாதம் 3ம் திகதிகளில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து, குறிப்பாக வட இந்தியாவிலிருந்து பெருமளவில் இலங்கை வந்து உடனடியாகத் தாயகம் திரும்புவோரின் நலன்கருதியே டிக்கட் வழங்கும் திகதியில் மாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்குமிடையேவாரத்தில் மூன்று தடவைகள் கப்பல் சேவை நடைபெறுகிறது. யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து ஒரு கப்பலுக்கு ஐம்பது டிக்கட்டுகள் வீதம் வாரம் நூற்றுஐம்பது டிக்கட்டுகள் வழங்கப்பட்டுவருகிறது'

# 22-வது திருக்குறள் மாநாடு

## கோப்பாயில்

(யாழ்ப்பாணம்)

தமிழ்மறைக் கழகத்தின் 2?வது திருக்குறள் மகாநாடு கோப்பாய் மகா வித்தியாலயத்தில் ஜூன் 5, 6, 7ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

மகாநாட்டுக் குழுத் தலைவராகக் கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரமும், இணைச் செயலாளராக திருவாளர்கள் க. நடராசா, ஐ. இரத்தினம் ஆகியோரும், பொருளாளராக மு. ஜெகதீசனும் நியமிக்கப்பட்டுள்ளனர். மற்றும் நிகழ்ச்சிக்குழு, மலர்க்குழு, திருக்குறள் மனனப் போட்டிக்குழு, விழா ஒழுங்குக் குழு, நிதிக்குழு, வரவேற்புக் குழு, பிரசாரக்குழு, போக்குவரத்துக்குழு ஆகியனவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மகாநாடு பகல் நிகழ்ச்சிகள் கோப்பாய் மகாவித்தியாலயத்திலும், மாலைநிகழ்ச்சிகள் மகாவித்தியாலய மைதானத்திலும் நடைபெறும். (மா)

# புனிதமிஃறாஜ்தினம்

### இன்று கொண்டாடப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

புனித மிஃறாஜ் தினம் இன்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

பொம்மைவெளி முஸ்லிம் குடியேற்றத்திட்டதில் அமைந்திருக்கும் அல்-மதுரஸத்துஸ்ஸலாமியாவில் மிஃறாஜ் தினத்தையொட்டி இன்று மாலை மார்க்க நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

# நெடுந்தீவில் டாக்டர்கள் படை!

[நெடுந்தீவு]

நெடுந்தீவில் இலவச வைத்தியசேவைகளையும் ஆலோசனைகளையும் வழங்கும் பொருட்டு வைத்திய கலாநிதி கே. ஈ. சந்திரபால் தலைமையில் 75 டாக்டர்களைக் கொண்ட குழுவொன்று நெடுந்தீவுக்கு வருகின்றது. காது, மூக்கு, தொண்டைச் சிகிச்சைகளை இவர்கள் நெடுந்தீவில் இலவசமாக மேற்கொள்வார்கள். இன்றுவெள்ளிக்கிழமை நெடுந்தீவு மத்தி தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் நோயாளர்நளை இவர்கள் பார்வையிடுவார்கள். [அ]

PICTURES COME THRILLINGLY ALIVE WITH

LUXOR

COLOUR T. V. OF SWEDEN

Some of the features offered by Luxor-

- Living colour
- A clear picture
- Built-in voltage stabiliser
- Hi-fidelity sound
- Automatic frequency control
- Automatic and manual picture control
- Permanent picture quality
- Elegant Stand
- Connections for video recorders and head-phones
- Lower power consumption
- Modular construction

37 cm (14") — Rs. 9,750/-
41 cm (16") — Rs. 11,600/-
51 cm (20") — Rs. 13,950/- with stand
51 cm (20") — Rs. 17,000/- with remote control
56 cm (22") — Rs. 19,500/- with remote
67 cm (26") — Rs. 25,275/- control and electronic tuning.

Three year Guarantee – Finance available.

THE CENTRAL FINANCE CO., LTD.
250, K. K. S. Road, Jaffna 'phone 8360

# "அரசு - கூட்டணி பேச்சுக்கள் இனத்தின் நன்மைக்காகவே"

### --ஆலால் எம். பி.

[நல்லூர்]

''தந்தை செல்வ நாயகம் தனது அரசியல் வரலாற்றில் தாம் கூறிய சமஷ்டி இலட்சியத்துக்குக் குறைவான கோரிக்கைகள் பற்றி மூன்று தடவைகள் பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் மேற்கொண்டார். ஆகவே தந்தை தமது இலட்சியத்தை கைவிட்டார் என்று அர்த்தமில்லை''

இவ்வாறு நல்லூர் சங்கிலியன் மன்றத் திறந்த வெளியரங்கில் இடம்பெற்ற அமரர் கிருஷ்ணபிள்ளை துரைசிங்கம் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம் கூறினார்'

சட்டத்தரணி திரு. கனகேசன் தலைமையில் இடம் பெற்ற இவ்வைபவத்தில் கோப்பாய் எம். பி. மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ், இனத்தின் விடுதலைக்காகத் தந்தை செல்வா இயக்கத்தை ஆரம்பித்த போது அவருக்குப்பக்கபலமாக இருந்து செயற்பட்ட தலைவர்களுள் அமரர் கிருஷ்ணபிள்ளை துரைசிங்கம் மிகவும் முக்கியமானவர் அவர் தமது வாழ்நாள் பூராவும் இனவிடுதலைக்கான ஒவ்வொரு முயற்சிக்கும் தமது பங்களிப்பைச் செய்து வந்தார்; என்னைப் போன்ற பல இளைஞர்களுக்கு இனவிடுதலை உணர்வை ஊட்டியவர் திரு. துரைசிங்கம். இயக்கம் ஆரம்பித்த காலத்தில் எத்தனையோ தடைகளை எல்லாம் தாண்டி இயக்கத்தைவளர்ச்க அவரைப் போன்றவர்கள்மேற்கொண்ட முயற்சிகளை நினைவு கூரவேண்டிய ஒருநிலை இன்று தோன்றியுள்ளது, இந்த நாட்டின் வரலாற்றில் எந்த ஒரு கட்டத்திலும் ஏற்படாத ஒற்றுமையை தமிழ் மக்கள் மத்தியில் தந்தை செல்வா ஏற்படுத்தினார். ஒன்றுபட்ட இனம் விடுதலை உணர்வோடு செயற்படவைத்தார். இந்த ஒற்றுமையை சிதைப்பதற்கான முயற்சிகள் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு சக்திகளால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தந்தை செல்வாவும் அவரது தானைத்தளபதிகளும் இனத்தின் நன்மைக்காகவன்றி வேறு எந்த விதத்திலும் பாதகமான முறையில் செயற்படாத காரணத்தால் தமிழ் மக்களின் பூரண நம்பிக்கையைப் பெற்றிருந்தார்கள் அந்த நம்பிக்கையில் வெடிப்பு ஏற்பட்டுவிட்டதாக யாராவது சிந்தித்தால் அது அவர்களது சிந்தனைக் கோளாறே.

'இந்த இயக்கம் ஆரம்பித்த நாளிலிருந்து இன்று வரை அது தமிழ் இனத்தின் நன்மைக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபட்டது என்று சுயஅறிவும், மனச்சாட்சியும் உடைய எவரும் கூறமாட்டார்கள்'

இந்த இயக்கத்தின் முடிவுகள் இயக்க பொதுச் சபையின் முடிவுகளே இன்று இயக்கம் பற்றி வசைமாரி பொழிபவர்களும் அந்தப் பொதுச் சபையின் உறுப்பினர்களாக இருந்து வழி நடத்திய காலத்தை மறக்கக்கூடாது,

''சில நெருக்கடி சூழ்நிலைகளைத் தவிர்க்க இடைக்காலத் தீர்வு ஒன்று அவசியம் என்று கண்டுதான் பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. இது புதியதல்ல அதேபோன்று ஒரு நிகழ்வு திரு அமிர்தலிங்கத்தின் தலைமையில்மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் பேச்சுவார்த்தைகள் இனத்தின் நன்மைக்காகவே இருக்கும் என்பதில் எவருச்கும் சந்தேகம் இருக்கமுடியாது. தந்தை செல்வா முதல் அமிர்வரை மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் பல பயன்தராமல் போனதை நாம் அறிவோம், அப்படியான ஒரு நிலையில் இயக்கம் தவறு இழைத்துவிட்டதாக பகுத்தறிவுள்ள எவனும் எண்ணமாட்டான்.

கடந்தகால வரலாற்றில் சரியான தலைமையைத் தமிழ் மக்கள் இனம்கண்டு கொண்டதைப்போல, எவர் எதைக் கூறினாலும் சரியான தலைமையைத தமிழ்மக்கள் ஏற்றுச் செயற்படுவதை எந்த சக்தியாலும் தடுக்கமுடியாது.

நொதோண் ஸ்போட்ஸ் கிளப் ஆதரவில் அமரர் கிருஷ்ணபிள்ளை துரைசிங்கம் ஞாபகார்த்தமாக ஆறுபேர் கொண்ட ஆறு ஓவர் மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற சென்றலைஸ் கழகத்திற்கு அமரர் துரைசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கேடயமும், ஆறு வீரர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும் பரிசளிக்கப்பட்டதோடு, இரண்டாம் இடத்தைப் பெற்ற, அரியாலை விளையாட்டுக்கழக 'பீ' அணிக்கு அமரர் செல்லத்துரை ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டது. அ)

## படவிமர்சனம்

# அலைகள் ஓய்வதில்லை

மாணிக்கம்

'அலைகள் ஓய்வதில்லை'-ஆம் கடல் அலைகள் சதாகாலமும் கரையைமீறிச் செல்ல முடியாமல் அங்கும் இங்கும் எங்கும் அலைந்துகொண்டுதானிருக்கின்றன.

ஆனால் காதல் வசத்தால் கட்டுண்டு சாதி-மதம்-பணம்-அந்தஸ்து-கௌரவம் என்ற பேரலைகளில் சிக்குண்டு தவியாய்த் தவிப்பவர்கள்-?

இரகசியமாக அவர்கள் ஒருவரை ஒருவர் கண்களால் நோக்கும்பொழுது- கொஞ்சிக் குலாவும் பொழுது படும்பாடு மகிழ்ச்சி! - துன்பமென்றால் என்ன என்று தெரியாத பருவ வயதெல்லவா?

பள்ளிப்பருவத்திலே - துடுக்குத்தனம் அடக்கவேண்டிய காலத்திலே தெரியாத்தனமாக பழகிவிட்டு காதல் வசப்பட்ட அன்பினால் இணைந்திருந்த அந்தப் பருவச்சிட்டுக்களை பிரித்துவிடுவது அந்தோ பரிதாபம்!

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த பிராமண இளைஞர்-

குபேர வாழ்க்கை வாழும் கிறிஸ்தவ யுவதி-

மறைமுகமாக தெரியாமல் இருவரின் காதலை வளர்க்கும் இளைஞனின் தாயார்

இருவரின் காதலை அறிந்து பேரலையாகக் குமுறும் அவளின் அண்ணன்-

காதலை வளர்க்க உயிரையும் கொடுக்கும் இளைஞனின் ஐந்து நண்பர்கள் இவர்கள் செய்யும் சாகசங்கள்-

காதலர்களின் உயிரைக் காப்பாற்றும் கிறிஸ்தவ பாதிரியார் இன்னும் பலபாத்திரங்களைக்கொண்டு படைக்கப்பட்ட ஓவியம் தான் 'அலைகள் ஓய்வதில்லை'

சாதி-மதகோட்பாடுகளை உடைத்தெறிய பூணூலையும், சிலுவை தாங்கிய மாலையையும் அறுத்தெறிந்துகாதலுக்கு சாதி-மத பேதமில்லை என்று சாவுமணி அடிக்கிறார்கள் இவ்விளம் சிட்டுகள்.

அவர்களின் காதல் அலைகள் ஓய்கின்றன. ஆனால் எமது நினைவலைகள் - மனோகரா தியேட்டரில் நாங்கள் பார்த்த 'அலைகள் ஓய்வதில்லை' என்றும் எம்நினைவைவிட்டு ஓயாது

குளு குளு வர்ணக்கலரில் கிளு கிளுப்பூட்டும் கண்ணுக்கினிய காட்சிகள்.

காதில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும் இனியபாடல்கள்.

இளைய தலைமுறையினரின் புதுமைப்படைப்பு

பொழுதுபோக்குக்காகஅல்ல உளரீதியிலேயே இரசித்து மகிழ்வதற்குரிய அத்தனை அம்சங்களும் குறைவில்லாமல் நிறைவுசெய்திருக்கிறார் டைரக்டர் பாரதிராஜா'

குடும்பத்துடன் சென்று பார்க்கவேண்டியபடம் 'அலைகள் ஓய்வதில்லை.'

# சீல் அடிக்காத படிகள் த[?]ாசுகள் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு உதவி வியாபார ஆணையாளரும் பரிசோதகர்களும் நல்லூர், திருநெல்வேலி, மருதனார்மடம், மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு ஆகிய சந்தைகளிலும் கோண்டாவில், மல்லாகம், காரைநகர் ஆகிய பகுதிகளிலும் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டு பாவனைக்கு விலக்கப்பட்ட இருத்தல் படிகளும் சீல் வைக்கப்படாத பல தராசுகளும் கண்டு பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. குறிப்பாக நல்லூர் சந்தையில் பத்துக்கு மேற்பட்ட சைக்கிள் மீன் வியாபாரிகளது தராசு படிகள் பறிமுதல் செய்யப்பட்டன

விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்கள் எம். சிவபாதசுந்தரம், என். அருளானந்தம், வி. சிவானந்தன், எஸ். சீவரத்தினம் ஆகியோர் குருநகர், சின்னக்கடைப் பகுதிகளில் பரிசோதனை மேற்கொண்ட போது குருநகரில் நியூசிற்றி பேக்கரியில் 430 கிறும் பாண் 2 ரூபா 70 சதத்திற்கு விற்கப்பட்டது வழக்கு தாக்கல் செய்ய முற்பட்டபோது உத்தியோகத்தரை கடமைசெய்யவிடாமல் தடை செய்த காரணத்தால் பொலிசில் முறைப்பாடு செய்து பின்னர் பொலிசாரின் உதவியுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு தடைசெய்த நபர்கள்கொண்டு வரப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. சான்றுப் பொருட்களும் விலைக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்டுள்ளது. இதே பேக்கரியில் பாவனைக்கு தடை செய்யப்பட்ட தராசு படிகளும் பறிமுதல் செய்யப்பட்டது.

நிறுவைகள் அளவைகள் பிரிவு பரிசோதகர்களும் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு பரிசோதகர்களும் நி[?]வைகள் அளவைகள் பிரிவு பொறுப்பதிகாரி பிலிப்பு தலைமையில் நல்லூர், திருநெல்வேலி சந்தைகளில் திடீர் பரிசோதனை மேற்கொண்டு சீல் செய்யாத 15க்கு மேற்பட்ட தராசுகளையும் 300 இருத்தல் படிகளையும் பறிமுதல் செய்தனர். நல்லூர் சந்தையில் சந்தைக் குத்தகைக்காரர் பாவித்த 100 கிலோ கிறும் வட்டதராசும் பறிமுதல் செய்யப்பட்டது. இத்தராசை வேண்டிய அளவில் அசைக்கக் கூடிய விதத்தில் வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (இ)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
THUNDER BALL


ஸிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
சிவாஜி–ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி பைரவன்
(புத்தம்புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக (சில தினங்கள் மட்டும்)
ஸ்ரீ பிரியா, சுபாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
பாக்கியராஜா
அஸ்வினி
ஒரு கை ஓசை
[ஈஸ்ட்மன் கலர்–புதிய பிரதி]

ரீகல்
தினசரி 4 காட்சிகள்
[யாழ். நகர்]
சிவாஜி
விஜயா
ரிஷிமூலம்
[கலர்—இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி]

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-15, இரவு 9-30


ஆயிரக்கணக்கான ரசிகர்களின் அன்புக்கு அடிமைகொண்டு திரை அரங்கு நிறைந்த காட்சிகளாக
ஸ்னரல் நடிகர்
★ ரஜனிகாந்
★ விஜயன்
★ கராத்தே மணி
★ சுஜாதா
★ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]


# இன்றைய பலன்

வைகாசிமாதம் 7ம் திகதி
வெள்ளிக்கிழமை
(21—5—82)

மேடம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும். எதிலும் தாக்க மனப்பான்மை உடாவாகும். சிநேகிதர் வழியால் கவலைகள் தோன்றக்கூடும். விவசாயிகளாயின் ஏமாற்றத்துக்கு இடமுண்டு.

இடபம்: நிதியில் அபிவிருத்தி காணப்படும் பூர்வீகச்சொத்து ஒன்று உமக்குக் கிடைக்கக்கூடும். புண்ணிய விருத்திக்கு இடமுண்டு, திருப்திகரமான நாள்.

மிதுனம்; ஆசாரக் குறைவுக்கும் அவசரப் போக்குக்கும் இடமுண்டு இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக் கொள்ளவும். பூமிப் பிணக்கினுல் வழக்கு விவகாரத்திற்கும் இடமேற்படக்கூடும்.

கடகம்: தன்பான வாழ்வுடன் தனமுடைமை சேரும். தாயின் ஆதரவும் தவருது கிடைக்கும். முயற்சி செய்ய முன்னேற்றமுண்டு. நல்ல தினமாகும்.

சிங்கம்: எப்பக்கம் திரும்பினுலும் ஆதரவு கொடுப்பதற்கு அன்பர்கள் முன்வருவார்கள். பொது மக்கள்மத்தியில் மதிப்பு ஏற்படலாம். தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும்பங்கு இருக்கும்.

கன்னி: விபரீதங்கள் விளையும். வியாபாரத் துறையில் நஷ்டமேற்படும். அக்கினியாயுத பீலடக்கு இடமுண்டு. நிதான புத்தியுடன் சுகாதாரத்தைப் பேணிக் கொள்ளவும்.

துலாம்: இன்பத்தின் அணைப்பில் இதயத்தை பறி கொடுப்பீர்கள். பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் காதல்கணை தாக்கும். குடும்பஸ்தவர்களுக்கும் சுவையான சம்பவங்கள் உண்டு.

விருச்சிகம்: பகை மூட்டம் வட்டமிடும். வீணான வார்த்தைகளால் மனம் புண்படும். தொழில் துறையில் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும். கடிதம் ஒன்று கவலையைத் தரலாம்.

தனு: தந்தைவழிப்பெருமை உண்டு ஸ்தல யாத்திரை ஒன்றும் மேற்கொள்ளப்படலாம். குடும்பத்திலும் மகிழ்ச்சிதென்படும். நல்லதினமாகும்.

மகரம்: ஒய்வையும் உல்லாசத்தையும் விரும்புவீர்கள். தொழில் துறையில் விரைவில் நல்ல மாற்றம் ஏற்படலாம். உங்களின் ஆதரவைத் தேடி அரசியல் வாதி படையெடுப்பர்.

கும்பம்: வணிகத்துறையில் புதிய வாய்ப்புகள் ஏற்படும். சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும். புதுமையான எண்ணங்கள் தலை தூக்கும். பொது மக்களின் ஆதரவு கிடைக்கும்.

மீனம்: தானிய விருத்தியில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம். விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். அதிக சிந்தனையின் மூலம் தலையிடியும் தோன்றக்கூடும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## நல்லையில் சேக்கிழார் விழா 27-ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் எதிர்வரும் 27 ம், 28ம் திகதிகளில் சேக்கிழார் குரு பூசையைப் பெருவிழாவாக நடத்தவிருக்கின்றது.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவிருக்கும் சேக்கிழார் விழாக்களில் தமிழகத்தைச் சேர்ந்த பூம்புகார் கலைக் கல்லூரிப் பேராசிரியர் ரீ த. அகரமுதல்வன் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றவுள்ளார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடத்தப்படவிருக்கும் இருநாள் விழாவையடுத்து, கொழும்பு, திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களில் சிறப்புச் சொற்பொழிவுகளையும், யாழ். இந்துக் கல்லூரியில் சில தினங்களுக்கு தொடர் விரிவுரையையும் ஒழுங்கு செய்ய அகில இலங்கை சேக்கிழார் மன்றம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

சேக்கிழார் விழா நிகழ்ச்சிகளில் தமிழக அறிஞர்களுடன் இலங்கை அறிஞர்களும் பங்கு கொள்வார்கள். [சி]

## பாடசாலை அ. வி. சங்கம் பற்றிய புதியசுற்றுநிருபம்

(கோண்டாவில்)

பாடசாலை அபிவிருத்திச் சபை பற்றிய ஒரு புதிய சுற்று நிருபம் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பல மாற்றங்களைக் கொண்ட புதிய சுற்றுநிருபத்தின் மூலம் முன்னைய பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பற்றிய சுற்றுநிருபம் நீக்கப்பட்டுள்ளது.

முன்னைய சுற்றுநிருபத்தின் கீழ் பாடசாலையில் அக்கறை கொண்ட சகலரும் 5 ரூபா பணத்தை அங்கத்துவப்பணமாகக் கட்டிச் சேர்ந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. புதிய சுற்றுநிருபத்தின்மூலம் பெற்றோர்கள் நேரடியான அங்கத்துவத்தைப் பெறலாம். பழைய மாணவர்கள் பழைய மாணவர் சங்கத்தினூடாக சிபார்சுசெய்யப்படுவதுடன் நலன்விரும்பிகள் அபிவிருத்திச்சங்கம் அங்கீகரித்தால் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

ஆட்சிக்குழுவினர் ஆகக்கூடிய எண்ணிக்கை 21ஆகவே இருக்கமுடியும். இதில் மூன்றில் ஒரு பங்கு பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டும். நலன்விரும்பிகள் இரண்டுபேர் மட்டுமே ஆட்சிக் குழுவில் இருக்கமுடியும். மிகுதியானவர்கள் பெற்ருேர்களே.

ஆசிரியர்கள் உறுப்புரிமை பணம் செலுத்தத் தேவையில்லை. பெற்ருேர்கள் மூன்று ரூபாவும் நலன்விரும்பிகள் பதினைந்து ரூபாவும் கட்டவேண்டும். (அ)

## வட்டு. இந்துவில் இன்று பாரதி விழா

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இன்று 'பாரதி நூற்ருண்டு விழா' கொண்டாடப்படுகின்றது.

கல்லூரியின் வள்ளியம்மை மண்டபத்தில் இன்று காலை ஆரம்பமாகும் பிரஸ்தாப விழாவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் சிறப்புப்பேருரை வழங்குவார். விழா நிகழ்ச்சிகள் மாலைவரை நடைபெறும்.

அதிபர் திரு கே. கே, நடராசா தலைமையில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் செல்வி. எஸ். மணிமொழி, வித்துவான் சி. ஆறுமுகம் ஆகியோரும், உப அதிபர் திரு. ப. சர்வேஸ்வர ஐயர் தலைமையில் நடைபெற விருக்கும் மாலை நிகழ்ச்சிகளில் திரு. வ. ஆறுமுகம் திருமதிகள் பத்மா சிவகுருநாதன், சித்திரலேகா மௌனகுரு, செல்விகள் சுமங்கலி சுப்பிரமணியம், தமிழரசி நடராசா, ஆகியோரும் சிறப்புச் சொற்பொழிவுகளைவழங்கவுள்ளனர். இரு வேளையும் பாடசாலை மாணவரது கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும், [கி]


## கலை விழா

(கரவெட்டி)

கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலத்தின்கலைவிழா இம் மாதம் 23ம் திகதி நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு வ. க. ஈசுரபாதம் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு மு. தம்பிமுத்து ஆகியோர் கலந்து கொள்வார்கள்.


யாழ். மனோகராவில்
வெற்றி முரசு கொட்டும் 3-வது வாரம்
ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ் புல்!!!
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
இந்தியாவில் 250 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிவாகை சூடியதுடன்
வெற்றி விழாவில் பரிசு பெற்ற சிறந்த காதல் காவியம்.
வசூலில் சாதனை!! சாதனை!! சாதனை!!
ஆசனங்கள் பதிவு செய்யப்பட மாட்டாது.
★ கார்திக் ராதா தியாகராஜன் ★


★ இன்னும் பலர் திறம்பட நடித்த ★
பாரதிராஜாவிற்கு திரைப்பட உலகில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றுக்கொடுத்திருக்கும் காதல் காவியம் தான்
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)
காட்சி நேரங்கள் குறிப்பிட முடியாதபடியால் ஆசனங்களுக்கு முந்துங்கள்.
வந்து வந்து திரும்பிச் செல்லும் மாதர் குலத்துக்கு
எங்கள் மனவருத்தத்தை தெரிவிக்கிறோம்.

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6–15, 9–15
சனி, ஞாயிறு 2–30
எம் ஜி ஆர்–லதா
பல்லாண்டு வாழ்க

5–வது வாரம்
ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

# வரி விளம்பரம்

## தேவை

சிறந்த பாடகர்கள், பாடகிகள், வாத்தியக் கலைஞர்கள், தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். விபரங்களுக்கு பா. நாகேஸ்வரன்–மேஜர்ஷண் 29/1, கடைச்சாமி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். 3182

யாழ்ப்பாணம், ரேயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில, கணித அறிவுள்ள பெண் உதவியாளர்கள் உடன் தேவை. நேரில் வரவும். 3237

பழைய கொப்பிகள், புத்தகங்கள், பேப்பர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்: அண்ணா தொழிலகம்: இணுவில். 3239

யாழ்ப்பாணத்திலுள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு ஊதுபத்தி உருட்டுவதில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை; இதன் கிளைகள், அரியாலை, யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, இணுவில் ஆகிய இடங்களில் உள்ளன. விண்ணப்பிக்க வேண்டிய விலாசம்: விளம்பர இல: 3240, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 3240

## பயிற்சி

ரேடியோ – டெலிவிசன், எயர்கொண்டிசனிங், வெல்டிங், HOTEL MANAGEMENT FRENCH மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம் 26–5–82 அனைவரும் சேரலாம். நேரில் வரவும். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 32[illegible]8

## விற்பனைக்கு

பனை தோட்டத்தில் மாங்காய் தொகையாக விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க நடராஜா, மனேஜர், பவர்அன் கொம்பனி, 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 3246

Toyata Hiagc வான் நல்ல கொண்டிசனில் (Red Number) விற்பனைக்குண்டு. தொடர்பு: 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். போன்; 7169. 3242

## விற்பனைக்கு

புனரமைக்கப்பெற்ற HONDA C 90 செல்வ்ஸ்ராட்டர் மொடல் மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 454. 3266

யாழ். திருமுறை மன்றத்தினரிடம் தஞ்சாவூரில் இருந்து தருவிக்கப்பெற்ற புதிய வீணைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: சி. கிருஷ்ணமூர்த்தி அகில இலங்கைத் திருமுறை மன்றம், 31/12, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 3[illegible]62

திண்டுக்கல் இரும்புப் பெட்டி விற்பனைக்குஉண்டு. தொடர்பு கொள்ளவும். 'கேசினி' மூளாய் வீதி. வட்டுக்கோட்டை. 3260

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கண்மையில் நன்னீர் சுற்றுடலுடன் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. துண்டுகளாகவோ முழுமையாகவோ விற்கப்படும். தொடர்பு; செ. நடராசா, பிடவை மாளிகை, 58, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். 3256

## தேவை

கைத்தொழில் ஸ்தாபனம், கிறைண்டிங் மில் ஆகியவற்றிற்கு பங்காளர்/கிறைண்டிங் மில்லில் வேலைசெய்வதற்கு ஆட்கள் தேவை. தேவன்ஸ், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3255

## வகுப்பு

தினசரி மாலைநேர ஆங்கிலப் பேச்சு (Spoken English) வகுப்புகள் 5–6–82ல் ஆரம்பமாகின்றன விண்ணப்ப முடிவுத் திகதி; 30–5–82. விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி: நிர்வாகி, வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்லூரி, 29, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 3257

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## 22 வருட சேவையின் பின் இடமாற்றம்

[புலோலி]

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியையாகக்கடமையாற்றிய திருமதி ஜெயபூபதி குலசிங்கம் செம்பியன்பற்று கனிஷ்ட தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

22 வருடங்களாக வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலேயே கடமையாற்றியஇவர் கல்லூரியின் விளையாட்டுத்துறை அபிவிருத்தியிலும் முக்கிய பங்கெடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனம் எதையும் நிறைவேற்றாது இறந்த யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை இல. 23, கடையிற்சாமி ஒழுங்கையில் வசித்த செல்லையா சுப்பிரமணியம் என்பவரின் சொத்துக்களுக்குநிர்வாக தத்துவப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம் சம்பந்தமாக.

[மரணமெய்தியவர்]

மரணச்சொத்து)
நியாயாதிக்கம் ) இல 3656/T

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை 23, கடையிற் சாமி ஒழுங்கை, செ. சுப்பிரமணியம் கைம்பெண் பொற்கொடி.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவப் பத்திரம் பெறுவதற்காகத் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம்ஆண்டு வைகாசி மாதம் 28ம் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற ஆணைப்படி,
தா. குலஞானம்,
பதிவாளர்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 01ம் திகதி.

வரைந்தவர்:
C. சோமசேகரம்,
மனுதாரின்
சட்டத்தரணி

3252

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் கேள்விப்பத்திர விளம்பரம்

சாவகச்சேரி வாடிவீட்டுக் கட்டிடம், சமையலறைக் கட்டிடங்கள் யாவும் உடைத்து அப்புறப்படுத்தல்

மேற்படி விற்பனை சம்பந்தமாக அரக்கு முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் என்னுல் 15 06–82ம் திகதி 4–15 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 14–6–82ம் திகதி நண்பகல் 12–00 மணி வரை நகராட்சி மன்ற அலுவலகத்தில் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 500/–உம், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 50/–உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்விற்பனவு பற்றிய மேலதிக விபரங்களையும், விதிகளையும் அறிய விரும்புவோர் இவ்வலுவலகத்தில், அலுவலக நேரத்தில் இம்மன்ற மராமத்து அத்தியட்சகரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சி. க. மயில்வாகனம்
தலைவர்
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
14–5–1982 3234

## பாரதி விழா

(நல்லூர்)

இன்று நல்லூர் கல்யாண மண்டபத்தில் நல்லூர் நகைச்சுவை மன்றத்தினர் பாரதி விழாவொன்றை நடாத்துகின்றனர்.

இவ்விழாவில் முன்னாள் உதவி மேயர் திரு ஆ. துரைராஜசிங்கம், அரியாலையூர் வே. ஐயாத்துரை, சி. குமாரசாமி ஆகியோர் உரை நிகழ்த்துவர். வி. ரி. ஏ. விஸ்வாவின் ''நல்லதோர் வீணை', குமார் தனபாலின் 'பாரதி அழுது கொண்டிருக்கிறார்' என்ற நாடகங்களும் இடம்பெறும். (இ)

## வெள்ளப்பெருக்கு 430 பேர் பலி!

பீக்கிங், மே. 20

சீனாவின் தென்பகுதியில் உள்ள குவாங்டுங் பகுதியில் ஏற்பட்ட பெருவெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மூலம் உணவுப் பார்சல்களை விநியோகித்ததாக அறிவிக்கப்பட்டது.

இவ்வெள்ளப் பெருக்கினால் இதுவரை 430 பேர் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## உதவி

புதுடில்லி, மே. 20

சோவியத் யூனியன் பாரதத்திற்கு 25 லட்சம் கலன் கச்சா எண்ணெயை வழங்கவிருக்கிறது.

இதற்கான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்தானது, 15 லட்சம் மண்ணெண்ணெயும் இந்த ஒப்பந்தத்தின்கீழ் வழங்கப்படும்.


## PATRICIAN INSTITUTES

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெறவிரும்புவோருக்கு, முழுமையாக மீளாய்வு செய்யப்பட்டதும், நவீனமயமாக்கப்பட்டதுமான 'பட்றீசியன் நிறுவனத்தில்' தொழில்தகுதியும், அனுபவமும் வாய்ந்த போதனாசிரியர்களால் கீழ்க்கண்ட பயிற்சி நெறிகளில் துரித பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சி நெறிகள்:

1. மோட்டார் இயந்திரவியல் (ஆறு மாதங்கள்)
2. மெஷினிஸ்ட் அல்லது லேத் ஒப்பரேசன் (ஆறு மாதங்கள்)
3. வெல்டிங் (மூன்று மாதங்கள்)
4. எலெக்றிக்கல் வயறிங் (மூன்று மாதங்கள்)

பயிற்சிகளைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரங்களை கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 29–5–82 நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். பயிற்சி வகுப்புக்கள் ஜூன் முதல் பகுதியில் ஆரம்பமாகும். மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள்.

விபரங்கட்கு:

'பதிவாளர்,
பட்றீசியன் நிறுவனம்,
59, சென் பற்றிக்ஸ் ரோட்,
யாழ்ப்பாணம்.

3263



## DAI HATSU CHARADE

11 Sri Forty Four Thousand Series
METALIC SILVER, AGENTS IMPORTED, SINGLE OWNER - DOCTOR, EXCELLANT, CONDITION.

Inspection: 22nd and 23rd MAY 9 a.m. to 5 p.m.

**Mc Lead Hospital**
INUVIL, CHUNNAKAM. 3261



## VACANCY

BUILDING CONSTRUCTION SUPERVISOR
WE ARE LOOKING FOR AN EXPERIENCED BUILDING CONSTRUCTION SUPERVISOR TO BE IN CHARGE OF THE CONSTRUCTION OF A PILGRIMS' REST (MADAM) AT KATARAGAMA. RETIRED PERSONS IN SOUND HEALTH WILL ALSO BE CONSIDERED. SALARY AND OTHER TERMS ARE ATTRACTIVE AND ARE NEGOT–IABLE. PLEASE APPLY WITH FULL BIO-DATA AND NAMES OF TWO NON-RELATED REFEREES TO.

The Vice President
RAMAKRISHNA MISSION
40, RAMAKRISHNA ROAD,
COLOMBO 6.

32[illegible]4


உ

## திருமண அழைப்பு

நிகழும் துந்துபி வருடம் வைகாசி மாதம் 10–ந் திகதி (24–5–82) திங்கட்கிழமை காலை 9–00 மணி முதல் 12–00 மணி வரையுள்ள கடகலக்கின சுபமுகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| எனது சிரேஷ்ட புதல்வன் திருநிறை செல்வன் **ஸ்ரீகாந்தா அவர்கட்கும்** உரிமையாளர்: ஸ்ரீசண்முகநாத அச்சகம், ஸ்ரீசண்முகநாதன் புத்தகசாலை. | எமது கனிஷ்ட புதல்வி திருநிறை செல்வி **மாலினி அவர்கட்கும்** பயிற்சியாளர்: STCA—மகளிர் தொழிற்கல்வி நிலையம். |

இறைவன் திருவருளால் திருமண வைபவம் யாழ்ப்பா[illegible] நடைபெறப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதா[illegible] சூழச் சமுகந் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் [illegible]

இங்ஙன[illegible]

திருமதி ச. குமாரசுவாமி,
239, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சிறிலங்கா சுதந்திர கட்சி:

# பாராளுமன்றக் குழுத்தலைவர் மைத்திரியா? லக்ஷ்மனா?

## பாராளுமன்றத்தில் 'இழுபறி'

(கொழும்பு)

சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்றக்குழுவின் தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவா, திரு. லக்ஷ்மன் ஜயக்கொடியா என்ற சர்ச்சை நேற்று பாராளுமன்றத்தில் எழுந்தது.

நேற்று பிற்பகல் பாராளுமன்றம் கூடியபோது பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு. வின்சன்ற் பெரேரா பாராளுமன்றத்தின் 121 ஆம் இலக்க நிலையியல்கட்டளையின் கீழான தெரிவுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக கூறி அக்குழுவின் அங்கத்தவர்களின் பெயர்களை வாசித்தார்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, திரு. செள. தொண்டமான், திரு.ரஞ்சித்அத்தபத்து ஜனாப் எம்.ஏ. அப்துல் மஜீத், திரு ஜோசப் மைக்கல் பெரேரா, திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வின்சன்ட் பெரேரா, திரு. மு. சிவசிதம்பரம், திரு மைத்திரிபால சேனநாயக்கா, திரு.சரத் முத்தெட்டுவேகம ஆகியோரின் பெயரை திரு. வின்சன்ட் பெரேரா வாசித்ததையடுத்து சுதந்திரக் கட்சி (சிறிமா) யைச் சேர்ந்த லக்ஷ்மன் ஜயக்கொடி எழுந்து பிரச்னை ஒன்றைக் கிளப்பினார்.

பாராளுமன்றத்தில் உள்ள சிறீலங்கா சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் ஏழு பேரில் நான்குபேர் கையெழுத்திட்டு நானே பாராளுமன்றக் குழுத் தலைவர் என்று சபாநாயகருக்கு அறிவித்துள்ளனர் அப்படியிருக்கும்போது என்னைத் தவிர்த்து திரு. மைத்திரிபால சேனநாயக்காவையே மேற்படி தெரிவுச்குழுவில் நியமித்திருக்கிறீர்கள். அவர் அக்குழுவில் இருப்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் பெரும்பான்மைஉறுப்பினர் கொண்ட எமதுகுழுவின்கோரிக்கைப்படி என்னையும் அக்குழுவில்சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் திரு. ஜயக்கொடி

இதற்குப் பதிலளித்த பிரதமர் பின்வருமாறு கூறினார்;—

சுதந்திரக்கட்சியின் தலைவர் யார் என்பதை தேர்தல் ஆணையாளரே அங்கீகரிக்க வேண்டும்.

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறமாவோ பண்டாரநாயக்க குடியுரிமையையும், எம். பி. பதவியையும் இழந்தபோது திரு மைத்திரிபால சேனநாயக்காவே தலைவர்என நீங்களே ஏற்றுக்கொண்டீர்கள்.

நீங்கள் உரிய முறையில் தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பித்து தெரிவுசெய்து கொள்ளுங்கள். (மா-இ)

## புதிய திட்டத்தின் மூலம் சிமெந்து விநியோகம்

[யாழ்ப்பாணம்]

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் சிமெந்தில் மூன்றில் ஒரு பகுதியை சங்கத்தின் மூலம் விநியோகிக்கவும், மிகுதியை உதவி அரசாங்க அதிபர் மூலம் விநியோகிக்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ். உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு. த. பார்க்கண்டு, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

5 பைக்கட்டுக்கு குறைவான சிமெந்தை ப. நோ. கூ. சங்கம் வழங்கும். 5 பைக்கட்டுக்கு கூடுதலாகவும், 100 பைக்கட்டுக்கு உட்பட்ட தொகையை உதவி அரசாங்க அதிபர் வழங்குவார்.

விண்ணப்பதாரர்கள் தங்களுக்குகிட்டிய இடங்களிலிருந்து சிமெந்துபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

சங்கத்திடம் சிமெந்துபெறுவதாயின் கிளைக்குழுவும், உதவி அரசாங்க அதிபரிடம் பெறுவதாயின் கிராமசேவையாளரும் சிபார்சு செய்வார்கள்.

சிபார்சுப் பத்திரங்களை ப, நோ கூ. சங்கங்கள் விநியோகிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [ஈ-இ]

## சித்தசுவாதீனமற்றவர் கிணற்றில்குதித்துதற்கொலை

(சாவகச்சேரி)

சித்தசுவாதீனமற்ற 56 வயது நபர் கிணற்றில் குதித்து தற்கொலைசெய்து கொண்டார்.

கிளாலியைச் சேர்ந்த சின்னப்பு கந்தையா என்பவரே இவ்வாறு தற்கொலைசெய்து கொண்டவராவார்.

பளைப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு எம். குமாரவேலு சாவகச்சேரிப் பொலிஸ் உதவியுடன் விசாரணையை மேற்கொண்டார்.

காலமானவரின் மனைவி திருமதி இலட்சுமி மகன் இராசரத்தினம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இறந்த சின்னப்பு கந்தையா சித்தசுவாதீனமற்ற நிலையில் கடந்த 3 ஆண்டுகள் இருந்ததாகவும் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் இவர் வைத்தியம் செய்துவந்து குணமடையாத நிலையில் சம்பவதினம் கிளாலியிலுள்ள ஐயனார்கோவில் கிணற்றில் குதித்ததாகவும் உடனடியாக இவரது மகன் இராசரத்தினம் ஏனையோரின் உதவியுடன் கிணற்றிலிருந்து மீட்டு வெளியே எடுத்த பொழுது இவர் இறந்துவிட்டதாகவும் சாட்சியங்கள் மூலம் தெரியவந்தது.

மரணவிசாரணை அதிகாரி திரு. எம். குமாரவேலு தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். இ)

## தனியார்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

'லயனல் குழு'வின் சிபார்சு மீது ஒரு கோடி ரூபாவையும் நஷ்டஈடாக வழங்க அரசாங்கம் இடபொழுது தீர்மானித்துள்ளது. [ம]

## துறைமுக..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

நிலக்கரியில் சிமெந்துத் தொழிற்சாலையின் முதலாம், இரண்டாம் டிரிளுச்சூழைகள் இயங்க ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து மாதாந்தம் சுமார் நாலாயிரம் தொன் நிலக்கரி சிமெந்துக் கூட்டுத்தாபனத்திற்குத் தேவைப்படுகின்றது. ஏற்கனவே சிமெந்துக் கூட்டுத்தாபனம் பதினையாயிரம் தொன் நிலக்கரியை கல்கத்தாவிலிருந்து கப்பல்கள் மூலம் இறக்குமதிசெய்துள்ளது.

அண்மையில் காங்கேசன் துறைக்கு விஜயம்செய்த கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்யூ காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்பல்களிலிருந்துதுறைமுகத்தொழிலாளர்கள் சரிஇறக்குவதைட்பார்வையிட்டுத் தொழிலாளர்களின் துரித வேலைத்திறனை வெகுவாகப் பாராட்டினார். அமைச்சருடன் சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அசோகா சோமரத்னவும் வந்திருந்தார்.

இதுவரை இறக்குமதிசெய்யப்பட்ட நான்கு கப்பல்களிலிருந்தும் ஒப்பந்தம்செய்யப்பட்ட தொகையைவிடக்கூடிய தொன் இறக்குமதிசெய்ததினால், சிமெந்துக்கூட்டுத்தாபனத்திற்கு அந்நியச் செலாவணியாக நான்கு லட்சம் ரூபா கிடைத்துள்ளதும், அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த நான்கு கப்பல்களிலிருந்தும் இறக்குமதிவேலைகளை கப்பல் ஏஜென்சி நிறுவனமான மெசர்ஸ் கே. ஜெயபாலசிங்கம் கம்பனி தொழிலாளர்கள் மேற்கொண்டனர். அடுத்த மாதத்தில் மேலும் 20,000 தொன் கரியுடன் இரண்டு கப்பல்கள் இங்கு வரவிருக்கின்றன.

## ஊழியர், சங்கத்தலைவர் தாக்கப்பட்டனர்!

### வேலை நிறுத்த முஸ்தீபு

(கிளிநொச்சி]

பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்க, ஊழியர் சங்கத் தலைவரையும், ஊழியர் ஒருவரையும் தாக்கியதாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்க உள்ளனர்.

பூநகரி ப. நோ. கூ. சங்கம் மற்றும்இதன்இருபது கிளைகளையும் சேர்ந்த ஊழியர்கள் இம்மாதம் இருபத்து நான்காம் திகதிமுதல் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளனர்.

மேற்படி கூட்டுறவுச் சங்க ஊழியர் சங்கத்தலைவர்திரு.க. நவேந்திரராஜா,சங்க ஊழியர் திரு. ராசநாயகம் ஆகிய இருவரும் இனம்தெரியாதவர்களினல் நேற்றுமுன்தினம் தாக்கப்பட்டனர்.இதுசம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ப. நோ. கூ. சங்கத் தலைவருக்கும் கிளிநொச்சி எம் பி, பூநகரி உதவி அரசாங்க அதிபர், வவனியா பொலிஸ் அத்தியட்சர் ஆகியோருக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நடவடிக்கை மேற்கொள்ளப்படாதபட்சத்தில் இம்மாதம் 24-ம் திகதி முதல் வேலைநிறுத்தம் செய்வதென்று அறிவித்துள்ளனர்.

## நடிகை ஸோபியா கைது

ஜெனிவா, மே 20

ஹொலிவூட் நடிகை ஸோபியா லோரன்ஸ் ஜெனிவா விமானநிலையத்தில் இன்று கைதுசெய்யப்பட்டார்!

1967-ல் மூன்று திரைப்படங்களில் நடித்து, இதன் வருமானத்தை வெளியிடாததைத் தொடர்ந்து இவர்மீது வழக்குத் தொடரப்பட்டு 1982-ல் ஸோபியா லோரன்ஸுக்கு முப்பது நாள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஆனாலும் நீண்டகாலம் இவர் மறைந்து வாழ்ந்ததால், தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டார்.

ஜெனிவா விமான நிலையத்தில் பொலிஸாரினல் கைது செய்யப்பட்ட நடிகை ஸோபியா பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

## பூர்த்திபெறும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நிதி உதவியை The council for the establishment of cancer treatment centre எனும் பெயருக்கு காசோலையாக டாக்டர் எம். சுந்தரலிங்கம் (பொருளாளர்) 38, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.


மிகவும் குறைந்த விசேட விமானக் கட்டணங்கள் யாழ்ப்பாணத்தில்

மக்கினென்ஸ் வழங்குகிறது

★ சிங்கப்பூர் கூட்டாகச் செல்வோருக்கு (GROUP TICKETS) மிகவும் கூடிய கழிவுடன் மற்றும் ⁂ மத்திய கிழக்கு ⁂ லண்டன்

உலகின் எப்பாகத்துக்கும் விரும்பிய விமானத்தில் விமான டிக்கட்

அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளாக எம்மிடம்

வங்கியில் அறவிடும் அதே கட்டணத்தில் பிரயாணக் காசோலைகள் (TRAVELLERS CHEQUES) நாடுங்கள்

மக்கினென்ஸ் ட்றவல் ... (சிலோன்) லிமிட்

... யாழ்ப்பாணம்.

... தொலைபேசி: 8154


## பஸ் விபத்து

### விபரம் சேகரிக்க நடவடிக்கை

[கொழும்பு]

தனியார் பஸ்போக்குவரத்து அமைச்சு, பஸ் விபத்துக்கள் பற்றிய விபரங்களைச் சேகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை காலமும் பொது சன தொடர்பு சாதனங்கள் மூலமே இந்த விபரங்களைப் பெற்றது. தற்போது இதற்காகப் பொலிசாரின் உதவியை நாட முடிவு செய்துள்ளது.


ஹோம் பிரெண்ஸ் லிமிட்டெட்

அவசர தேவை

டீசல் மோட்டார் மெக்கானிக்
(DIESEL MOTOR MECHANIC)

சிறந்த அனுபவமும் பஸ் ஓட்டும் லைசென்ஸ் பத்திரமும் உள்ள விண்ணப்பதாரிகள் உடனடியாக சகல விபரங்களுடனும் எமக்கு விண்ணப்பிக்கவும்.

மனேஜர்
ஹோம் பிரெண்ஸ் லிமிட்.
இல: 82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.



... ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஞு மே
... து. Registered as a News Paper at the General Post Office] Sri Lanka under number Q.B. 100236/81.
...nadu' T'phone: 389 and 8126.